[1982 செப்டம்பர் 7

திரு. பி. எஸ். துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நார் சம்பந்தப்பட்ட நூதன பொருள்களை செய்வதற்கு தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 20,30 நார் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகையால் அந்த இடத்திலே அந்த தொழிற்சாலையிலே நூதன பொருள்களைச் செய்வதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னது போல் தனியார்கள் இப்படிப்பட்ட முயற்சிகள் செய்வதற்கு எந்த எந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்த அந்த வகையில் உதவி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ‘மாடர்னைசேஷன்’ என்ற பெயரிலே இந்த குடிசைத் தொழிலுக்கு அரசு இயந்திரங்களை கொண்டுவர ஆரம்பித்தால் ஏராளமான பேருக்கு வேலை பாதிக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் பல கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் குடிசைத் தொழில் ஏராளமாக இருக்கிறது. அப்படிப்பட்ட தனி குடும்பங்களுக்கு பண உதவி, கடன் உதவி செய்வீர்களா? வேலை போகாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுடைய நோக்கம் எல்லாம் அந்த பொருளின் தரத்தை உயர்த்துவது தான். மற்ற மாநிலங்களோடு, மற்ற நாடுகளோடு போட்டி போட வேண்டும் என்ற குறியோடு தான் இருக்கிறோம். பணி புரிபவர்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு உத்திரவாதம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கயிறு தொழிற்சாலையை வறண்டு இருக்கிற, எந்த தொழிற்சாலையும் இல்லாத வட ஆற்காடு மாவட்டத்தில் அமைக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஆலோசிக்கப்படும்.

கிண்டி, அம்பத்தூர் தொழிற் பேட்டைகளிலுள்ள தொழிற் கூடங்கள்.

*வினா எண் 4—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர் பகுதிகளில் தொழிற்பேட்டைகளில் இருக்கும் ஷெட்டுகளை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் பணம் பெற்றுக்கொண்டு ஷெட்டை சொந்தமாக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) கிண்டி, அம்பத்தூர் மற்றும் இதர அரசு தொழில் பேட்டைகளில் இருக்கும் தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் வழங்குவதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்படி ஆணைப்படி தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே வழங்கத் தொடங்கிவிட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத்தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அதனுடைய மதிப்பீட்டை இன்றையதினம் இருக்கின்ற மதிப்பீட்டுப்படி கணக்கிடப்படுகிறதா? அல்லது கட்டப்பட்டபோது என்ன மதிப்பு இருந்ததோ அதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே இந்த பிரச்சனையைப் பொறுத்த வரையில் 2 அம்சங்களை மையமாக வைத்து இன்றைக்கு தவணை முறையில் அந்த தொழிற்சாலைகளை தொழில் முனைவோருக்கு கொடுக்கிறோம். (1) நிலத்தை வாங்கப்பட்ட நேரத்தில் ''அட் தி டைம் ஆப் அக்யூசேஷன்'' அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்பட்ட நேரத்தில் என்ன விலைக்கு வாங்கப்பட்டதோ அந்த விலையில் அந்த தொழில் முனைவோருக்கு தரப்படும். (2) கட்டிடத்தை பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டை குறியீடாக வைத்து அந்த ஆண்டின் மதிப்பு பிரகாரம் வசூல் செய்யப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கொடுக்கின்ற போது சில மெம்பர்கள் இந்த 20 ஆண்டு காலமாக அதற்குண்டான வாடகையை கட்டியிருக்கிறார்கள். அதனால் அரசுக்கு ஓரளவிற்கு வருவாய் வந்திருக்கிறது. தொழில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில் அதிலே ஒரு பகுதியை அவர்களுக்கு தள்ளுபடி செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். சலுகை அடிப்படையில் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்களைக் கலந்து பேசித்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோம். அவர்களே இதைப் பற்றிக் கேட்கவில்லை.